www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

கிண்ணம் 1 எண்ணம் 3



14 - 3 - 1990

சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

CHILDREN LITERATURE MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது எண்ணம்

14. 03. 90

இன்றைய துரதிஷ்டமான காலகட்டத்தில், "தெனாலிராமனும், கதைக் கதைகளுமா? தமிழர்களுக்குத் தேவையாய் இருக்கின்றது? என சில வாசகர்கள் இந்தவாகக் கேட்டு எழுதியிருக்கின்றார்கள்.

இவை விமர்சனங்களாய் இருந்தால் பதிலளிக்கலாம். ஆனாலும் இச் சிறுவர் சஞ்சிகையின் தோற்றத்திற்கான நோக்கங்கள் ஏற்கனவே தெளிவாகச் சொல்லி உள்ளோம்.

சிறுவர்களுக்காக வெளிவரும் அமுதத்தைப் பெற்றோர் வாசித்துத்தம் பிள்ளைகளுக்குச் சொல்கின்றார்கள். பிள்ளைகளும் சிலர் வாசித்து மகிழ்கின்றார்கள். இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று பெரியவர்கள் கூட ஆதரிக்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரியவர்கள், வயது வந்தோர் மத்தியில் வாசிப்பு (வாசகர்) மிகவும் குறைவாக உள்ளதால் நல்ல பல சஞ்சிகைகளின் பெயரே தெரியாமல் இருப்பவர்களுக்கு இப்படியான கதைகள் மூலம் வாசகர் விருத்தி செய்யலாம் என்று சில அன்பர்கள் அறிவுரை தந்திருக்கின்றார்கள். இக்கருத்துடன் யாரும் முரண்பட முடியாது. வாசிப்புப் பழக்கமற்ற ஒரு சமூகத்தில் எந்த விதமான ஏடுகளாலும் பயனில்லை. இங்கு தோன்றிவரும் ஏடுகள் ஈடேற முடியாமல் இடையில் நின்று போகவும் வாசகர் அற்ற சமூகமே காரணம். வாசகர் என்பது நாற்றமாய் இருக்கையில்..... ரோஜாக்களுக்குப் பிரயோசனம் இல்லை.

சிறுவர்களுடன் பெரியவர்களுக்கும் அமுதம் பயன் படுகின்றதென்றால்? தெனாலிராமனுக்கும், கழுதைகளுக்கும் நன்றிகள்

- ஆசிரியர் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்ல தந்திரம்

ஒரு காட்டில் சிங்கராசன் என்னும் சிங்கம், மதியூகி என்னும் யானையை மந்திரியாகக் கொண்டு, ஆட்சி நடாத்தி வந்தது. புலி, கரடி, ஒட்டகச்சிவிங்கி, பன்றி, மான், மரை, குரங்கு, போன்ற காட்டு மிருகங்களும், பிரதிநிதிகளாக இருந்தனர்.

ஒருநாள் சிங்கத்தின், அரண்மனையில் கொண்டாட்டம் ஒன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டுக் கொண்டிருந்தது. "யார் அறிவாளி? என்னும் விடயத்தில் கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது. "மந்திரி மதியூகியாரே, இந்தக் காட்டில் வாழும் நம்மவர்களில் யார் தக சிறந்த அறிவாளி என நீர் கருதுகின்றீர்?, என்று யானையைப் பார்த்து சிங்கம் கேட்டது. 'சிங்கராசாவே யானையாகிய நான் தான் தகசிறந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவாளி என்றது — 'சிலர் பிள்ளையாரையே
அறிவாளி, தந்திரசாலி, என்று சொல்கிற
ர்களே" என்று புலி குறுக்கிட்டது.
அறிவில் ஒரு பகுதியாக தந்திரம் வர-
லாம். ஆனால் அதையே அறிவு என்று
அப்படிச் சொல்ல முடியும். என்று
சொல்லிய யானை.... நண்பர்களே
உங்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகத்
தை நான் தீர்த்து வைக்கின்றேன்.
எனத் தனது பேச்சைத் தொடங்கியது.
எந்த ஒரு காரியத்தைச்
செய்ய வேண்டுமானாலும் அறிவே முதலில்
தேவைப் படுகின்றது. அறிவின் வடிவமாய்
உள்ள பிள்ளையாருக்கு யானை முகமே
இருக்கின்றது. எந்த ஒரு காரியத்தைத்
தொடங்க முன்னரும் நம்ம பிள்ளையாரை
வணங்கித்தானே எல்லாம் ஆரம்பமாகி
ன்றன. பிள்ளையார் சுழி தானே போட்டு
த் தொடங்குகின்றீர்கள் யாராவது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நரிச் சுழி போட்டுத் தொடங்குகின்றீர்களா? பட்டத்து யானை என்று கேள்விப் பட்டிருப்பீர்கள் பட்டத்து நரி என்று யாராவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? புராணங்கள், இதிகாசங்களில் நரிகள் பற்றி ஏதாவது உண்டா? ஏன் எல்லா மிருகங்களையும் வைத்து 'சேர்க்கஸ்' பழக்குகின்றார்கள் ஆனால் நரியை வைத்து யாரும் பழக்குவதில்லையே ஏன்?. அதற்கு ஒன்றைச் சொல்லிக் கொடுத்-தால் அதைக் கிரகித்துச் செய்ய வேண்டிய அறிவு இல்லாததே காரணம். இப்போது யார் அறிவாளி என்று புரிகின்றதா? என்று யானை தனது நீண்ட உரையை முடித்துக் கொண்டது. அனேகமான மிருகங்கள் கைதட்டியும், வாலாட்டியும் தலையாட்டியும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன. நரிகளோ தலையைக் கீழே போட்டுக் கொண்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யானையின் பேச்சைக் கேட்ட
சிங்கத்திற்கும் சந்தேகம் தெளிந்தது.
ஆனாலும், நரியின் தந்திரத்தை அறிய வேண்டும்
போலிருந்தது. சிங்கம் ஓர் எலியைப்
பிடித்து "நரியாரே இது என்னவென்று
சொல்லும் பார்ப்போம்" என்றது.
நரிக்கோ எலி என்று நன்றாகத் தெரியும்
ஆனாலும் இராசாவுடன் இது தான் என்று
முடிவாகச் சொல்லிக் கொண்டால் வீண்
பொல்லாப்புக்கள் வரும். அவர் சிலவேளை
வேறு ஏதோ வென்று நினைத்துக் கொண்டால்
எனக்குப் பிரச்சினை தான் என யோசித்த
நரி " அரசே இதை எலி என்று சொல்
கின்றார்கள். என்றது.

சிங்கத்திற்குச் சிரிப்புத்
தாங்க முடியவில்லை. எலி என்று திடமாகச்
சொல்லிக் கொள்ளாமல், மற்றவர்கள்
சொல்கின்றார்கள் என்று மற்றவர்கள்
மீது பழியைப் போட்டு விட்டுத் தான் தப்பிக்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளும் தந்திரத்தை நினைக்கச் சிங்க
த்திற்குச் சிரிப்பாகவே இருந்தது. ஆனாலும்
நரியின் வாயிலாகவே எலி என்று சொல்ல
வைக்க வேண்டும் என எண்ணிய சிங்கம்.
"நரியாரே மற்றவர்கள் சொல்வது இருக்கட்
டும். உமது அபிப்பிராயத்தை நீரே சொல்ல
வேண்டும். உமக்கு ஒரு மாதம் தவணை
தருகின்றேன். போய் வாரும் என அனுப்பி
வைத்தது. நரிக்கோ என்ன விதத்தில்
தப்பிக் கொள்வது என்று யோசனை. தனது
கூட்டத்தினருடன் தீவிரமான ஆலோசனை
நடத்தியது.

ஒரு மாதம் சென்றது. நரி
சிங்கத்தின் அரண்மனைக்கு வந்தது. சிங்கம்
"என்ன நரியாரே என்ன முடிவுடன் வந்தி
ருக்கின்றீர் என்றது. அதற்கு நரி "அரசே
எலி என்று சொல்லச் சொன்னார்கள்" என்றது
பின்னரும் எலி தான் தப்பிக் கொள்வதிலே
குறியாக நின்றதைக் கண்ட சிங்கத்திற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நரி தந்திர சாலி தான். அதனிடமிருந்து எதும் அறியமுடியாது. எப்படியும் தப்பிக் கொள்ள செய்யும் என்று அதன் தந்திரம் புரிந்தது. "நரியாரே நீர் அறிவாளி இல்லை என்றாலும் மகா தந்திர சாலி என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. மகிழ்ச்சி போய்வாரும் என அனுப்பி வைத்தது.

நன்றியுடன் "பரி"

---

## விடுகதை

பக்கமெல்லாம் மட்டை உண்டு. மரமுமல்ல;
பெயர்த்தெடுத்தால் முத்துண்டு; சிற்பியல்ல;
உடைத்தெடுத்தால் விதையுண்டு. பழமுமல்ல
- என்ன அது?

கத்திபோல இலை இருக்கும்;
கவரி மாப் பூப் பூக்கும்;
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காய்க்கும் - என்ன அது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமுதம் இதழ்களைத் தொடர்ந்து பெற
என்ன செய்ய வேண்டும்? என்று சிலர்
கேட்டு எழுதியிருக்கின்றீர்கள். நாமும்
அது பற்றி இதுவரை எதுவும் சொல்ல
வில்லைத்தான். வருந்துகின்றோம்.
ஆண்டுச் சந்தாவாக முப்பது டீஎம்(30)

R. SINNATHAMBY
KREIS SPARKASSE KÖLN
KONTO 114 6036885
BZ 37050299
5013 ELSDORF (RHLD)

அனுப்புவதன் மூலம் தொடர்ந்து
பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறோம். உங்கள் முகவரியைத்
தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
முகவரியில் மாற்றம் ஏற்பட்டால்
உடனே எமக்குத் தெரியப்படுத்துங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனம்



ஒரு பெரிய காட்டில் முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிறிய வேட்டித் துண்டு ஒன்றைத்தான் எந்நேரமும் உடுத்தி இருப்பார்.

காட்டில் உள்ள காய், கனிகளைச் சாப்பிட்டு விட்டு ஆற்றங்கரையில் படுத்து உறங்கிடுவார். போர்வை, தலையணை எதுவும் அவரிடம் இல்லை.

ஒரு நாள் ஆற்றங்கரையில் முனிவர் படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். அவரது தலை மயிர் ஆற்றில் ஆடிக் கொண்டிருந்தது. நீளமான அவரது தலைமயிரும், தாடியும் அவருக்கு ஒரு விதமான அழகைக் கொடுத்தன

www.tamilarangam.net

ஆற்றங்கரையில் முனிவர் படுத்திருப்பதை அவ்வழியே வந்த அரசனும், மந்திரியும் கண்டனர். அதிர்ச்சி அடைந்தனர் "இந்தக் குளிரில் எந்தவிதமான போர்வையும் இல்லாமல், தசுமயிரும் தண்ணீரில் நனைந்து கொண்டிருக்க எப்படி இந்த முனிவரால் தூங்க முடிகின்றது?" என இருவரும் ஆச்சரியப்பட்டு விட்டு, முனிவரை எழுப்பினர்கள்.

முனிவரே இந்தக் குளிரில் எப்படி உங்களால் எந்தவிதமான போர்வை கூடும் இல்லாமல் தூங்க முடிகின்றது. என அரசர் கேட்டார். "மனோதிடம் என்னிடம் இருக்கும் போது மற்றவை என்னை ஒன்றும் செய்ய முடியாது. என்று முனிவர் சொன்னர்.

மனோதிடமா? பழக்கமா? நீங்கள் பழகிவிட்டீர்கள். அதனால் தான் உங்களால் சமாளிக்க முடிகின்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என மந்திரி குறுக்கிட்டார்.

எந்த ஒரு பழக்கத்திற்கும், மனோதிடம் தான் தேவைப்படுகின்றது. என முனிவர் மந்திரியின் கருத்தை ஏற்க முடியாததை வெளிப்படுத்தினார்.

"விவாதிப்பதை விட அனுபவரீதியான முடிவினைக் காண்பதே விவேகம். முனிவரே தாங்கள் விரும்பினால், எமது அரண்மனையில் சிலகாலம் எம்முடன் தங்கியிருப்பதன் மூலம் இந்த மனோதிடம் பற்றிய விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். சம்மதிக்கின்றீர்களா? என அரசர் கேட்டார். முனிவரும் சம்மதித்தார்.

காட்டில், குளிரில், வெய்யிலில் காலம் கடத்திக் கொண்டிருந்த முனிவருக்கு அரண்மனை வாசம் வித்தியாசமானதாகவே இருந்தது. பட்டாடைகள், பரிவாரங்கள் என்று முனிவர், அரண்மனை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசியாகவே மாறிவிட்டார். நாட்கள் மாதங்களாக மாறிக் கொண்டிருந்தன.

அரண்மனை வாழ்க்கையின் காரணமாக முனிவர் தியானம், பிரார்த்தனை என்பவற்றைக் கூட மறந்து விட்டார். அரண்மனையில் அவற்றை அவர் இழிவு எனக் கருதுகின்ற நிலைக்கு நாளடைவில் மாறிவிட்டார்.

ஒரு நாள் முனிவர் குளித்துவிட்டு வரும் வழியில், நிலக் கம்பளத்திற்குக் கீழே ஒரு வாழைமடலை மந்திரி வைத்துவிட்டார். முனிவர் வரும் போது அதை மிதித்துக் கொண்டு நடந்து சென்றார். சிறிது நேரத்தில் முனிவருக்குக் குளிர் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. அரண்மனை வைத்தியர்கள் பலர் வந்து அவரைக் கவனித்து வைத்தியம் செய்து கொண்டிருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்தவற்றை எல்லாம் தெரிந்தும் தெரியாதவர் போல மந்திரியும், முனிவரின் அறைக்குள் வந்தார்.

என்ன முனிவரே, என்ன நடந்துவிட்டது. ஆற்றங்கரையினில், அர்த்த சாமங்களில், போர்வை இல்லாமல் குளிரிலும், மழையிலும் வாழ்ந்த உங்களுக்கு அரண்மனை வாசத்தில் என்ன கோளாறு ஏற்பட்டு விட்டது? ஏன் இந்த நடுக்கம்? அரண்மனை வாழ்வு கசந்து விட்டதா? என்று மந்திரி அடுக்கிக் கொண்டே போனார்.

இவ்வளவு நாளும் குளிர் இல்லாமல், வெந்நீர்க் குளிப்பு, வெந்நீர் உபயோகம் என்றிருந்த எனக்கு இன்று ஏதோ குளிர் பட்டுவிட்டது அதுதான் குளிர் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது" என நடுங்கிக் கொண்டு முனிவர் இருந்தார். என்ன முனிவரே

www.tamilarangam.net

அந்தக் கிளிர்களில் பழக்கப்பட்ட
உங்களுக்கு இந்தச் சிறு வாழைமடல்
வினையாக மாறிவிட்டதே பார்த்தீர்களா?
உங்கள் மனோதிடம் என்னாயிற்று?
என்றான் மந்திரி. உங்கள் அரண்மனைப்
பழக்க வழக்கங்கள் எனது மனோதிடத்
த்தைப் பாழாக்கிவிட்டன. என்றார்
முனிவர். என்ன எங்களது அரண்மனைப்
பழக்க வழக்கங்கள் உங்களுடைய
மனோதிடத்தைப் பாதித்துவிட்டதா?
சில காலந்தானே எம்முடன் இருக்கு
மாறு கூட்டி வந்தோம். நீங்கள் என்ன
வென்றால் இங்கு தான் நிரந்தரம் என்ற
எண்ணத்தில் உங்கள் தனித்துவங்களையே
கைவிட்டு விட்டீர்கள். நீங்கள் நிரந்தரம்
என்பது நிரந்தரமற்று இருக்கும் போது
உங்களது நிலையான பிரார்த்தனை,
தியானங்களையே மறந்து விட்டீர்கள்.
அதுமட்டுமல்ல, முனிவருக்கு உரிய வற்றையே


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறந்து விட்ட உங்கள் முனிவர் என்ற நிலையிலே வைத்துப் பார்க்கக் கூடாது. மந்திரியின் தீப்பொறி வசனங்கள் முனிவரை அதிரவைத்துவிட்டன. மந்திரி அவர்களே நான் காட்டில் வாழும் போது எனது உடலுழைப்பினால் சாப்பிட்டு வந்தேன். எனது நிலைமைக்கு ஏற்ற வாறு பழக்கங்கள் ஏற்படுத்தினேன். இவற்றால் எனது மனதிடம் வலிமை பெற்றதாய் இருந்தது. ஆனால் இங்கு உடலுழைப்பில்லை. தங்களிடமிருந்து எல்லாமே இலவசமாகக் கிடைக்கின்றன. அடுத்த வேளைச் சாப்பாட்டிற்கு என்ன? ஏது? என்று கூடச் சிந்திக்காத நிலையை இங்கு ஏற்படுத்திவிட்டீர்கள். இதனால் எனது மனதிடம் குறைந்து விட்டது. இதனால் தான் இந்த விபரீதம். என முனிவர் தலைகுனிந்து சொன்னார்.

முனிவரே, பிரார்த்தனை,

www.tamilarangam.net

தியானம் என்பவற்றை மறந்தும், இழிவாக நினைக்கும் போக்கு ஏன் ஏற்பட்டது? அரண்மனை தற்காலிக இடம், அதை நீர் உமது நிரந்தர இடமாக எண்ணி நிரந்தரமானவற்றையே இழந்து விட்டீர் எனவே பழையபடி காட்டிற்கு உடனடியாக நீர் செல்வதே நல்லது என மந்திரி கட்டளை போலச் சொன்னார்.

முனிவருக்குக் காய்ச்சல் அதிகமாக ஏறிவிட்டது போல இருந்தது. மந்திரி அவர்களே, போலி வாழ்க்கையினால் இழந்து விட்ட மனோதிடத்தை இரண்டொரு நாளில் என்னால் பெற்றுவிடமுடியும் என்னை அரண்மனைத் தோட்டப்புறத்தில் இரண்டு நாட்கள் தங்க அனுமதிக்கவேண்டும். அதன் பின்னர் நான் எனது நிரந்த பூமிக்குச் சென்று விடுகின்றேன். என்றார் முனிவராக. மந்திரியும் அவரது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடை....

1) சோளம், 2) வேம்பு

"மார்க்கத்தைக் காட்டுவது மதமாய் இருக்கலாம். ஆனால், மார்க்கைக் காட்டுவது மதமாய் இருக்க முடியாது"

தெனாலிராமன்.

## கடைசி விருப்பம்

இராயருக்கு அவர் தாயின்மேல் மிகுந்த பிரியம். தாயார் இறந்த நாளினை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று நினைத்தார்.

அரசகுரு தாத்தாச்சாரியாரைக் கூப்பிட்டு அவருடன் ஆலோசித்தார்.

''அரசே, இறந்து போனவர்களின் கடைசி விருப்பம் ஏதாவது நிறைவேறாது போனால், அவர்கள் விருப்பப்பட்ட பொருளை நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தானமாக வழங்கலாம். இவ்வாறு தானம் வழங்கினால் இறந்தவர்களது ஆன்மா சாந்தியடையும்'' என்றார், தாத்தாச்சாரியார்.

''என்னுடைய தாயார் இறக்கும்போது மாம்பழம் சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். மாம்பழம் கொண்டு வருவதற்குள் இறந்து விட்டார்கள். அவர்களுடைய கடைசி ஆசை நிறைவேறவே இல்லை'' என்றார் இராயர்.

www.tamilarangam.net

"உங்கள் தாயாரின் நினைவு நாளன்று நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தங்கத்தினால் செய்த மாம்பழத்தைத் தானமாக வழங்கினால் உங்கள் தாயாரின் ஆன்மா சாந்தியடையும்" என்றார், தாத்தாச்சாரியார்.

"அப்படியே செய்துவிடுவோம்!" என்றார், இராயர்.

அரச குருவுக்கு எவ்வளவு பேராசை பாருங்கள்! மாம்பழத்துக்கு ஈடாக மாம்பழம் கேட்டிருக்கலாம். தங்க மாம்பழம் வேண்டுமாமே!.

தாத்தாச்சாரியார் கூறியதைத் தெனாலி இராமன் கேட்டுக் கொண்டிருந்தான். அவருடைய பேராசைக் குணத்திற்குத் தக்க பாடம் புகட்ட வேண்டுமென்று நினைத்தான்.

மறுநாள் தாத்தாச்சாரியாரிடம் சென்றான். "ஐயா, என்னுடைய தாயாரின் நினைவு நாள் வருகிறது. அன்றையத்தினம் என் தாயாரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றலாம் என்று நினைக்கிறேன் அன்றையத்தினம் நூற்றி எட்டுப் புரோகிதர்களுக்குத் தானம் வழங்கலாமென்று நினைக்கிறேன்" என்றான், இராமன்.

"என்றைக்கு உன்னுடைய தாயாரின் நினைவு நாள்?" என்றார் தாத்தாச்சாரியார்.

"நாளைய தினம்!" என்றான், இராமன்.

"பரவாயில்லை! நாளை மறுநாள் அரண்மனையில் நம் அரசருடைய தாயாரின் நினைவு நாள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாளையதினம் நான் நூற்றெட்டுப் புரோகிதர்களுடன் உன் வீட்டுக்கு வந்துவிடுகிறேன்'' என்றார் தாத்தாச் சாரியார்.

இராமன் இராயரிடம் அடைந்துள்ள செல்வாக்கை எண்ணி, அவனுடன் விரோதித்துக் கொள்ள வேண்டாமென்று நினைத்தார். எனவேதான் அவன் வீட்டுக்குவருவதாக ஒப்புக் கொண்டார்.

மறுநாள் தெனாலி இராமன் வீட்டில் தாத்தாச் சாரியார் தலைமையில் நூற்றி எட்டுப் புரோகிதர்கள் தானம் வாங்குவதற்காகக் காத்திருந்தனர்.



இராமன் ஒவ்வொருவராக உள்ளே வர வழைத் தான். அவர்கள் கையில் பழுக்கக் காய்ந்த சூட்டுக் கோலினால் சூடு போட்டான்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இராமன் தாத்தாச்சாரியாரையும் விடவில்லை. அவர் கையிலும் சூடு போட்டுவிட்டான்.

தாத்தாச்சாரியார் அரண்மனைக்குச் சென்று இராயரிடம் முறையிட்டார்.

இராயர் இராமனை வரவழைத்தார்.

"இராமா, இது என்ன விளையாட்டு? உன் வீட்டுக்குத் தானம் வாங்க வந்தவர்களுக்குக் கையில் சூடு போட்டு அனுப்பினாயாமே!" என்றார், இராயர்.

"அரசே, என்னுடைய தாயார் இறக்கும் தறுவாயில் நோய் உபாதை பொறுக்க முடியாமல் தன் கையில் சூடு போடும்படி கேட்டுக்கொண்டார்கள். சூட்டுக்கோலை நெருப்பில் காய்ச்சி எடுத்து வருவதற்குள் என் தாயார் இறந்துவிட்டார்கள். அதனால் தான் அவருடைய நிறைவேறாத ஆசையை நிறைவேற்றினேன்" என்றான், இராமன்.

"அரசே, என்னை மன்னித்து விடுங்கள்! இராமன் இவ்வாறு செய்வான் என்று தெரிந்திருந்தால், தங்க மாம்பழங்கள் தானமாகத் தரவேண்டுமென்று நான் உங்களிடம் சொல்லியிருக்க மாட்டேன். எங்களுக்குத் தானமும் வேண்டாம். தங்க மாம்பழமும் வேண்டாம்" என்றார் தாத்தாச்சாரியார்.

இராமனின் புத்தி சாதுரியத்தினால் தங்க மாம்பழ தானம் நிறுத்தப்பட்டது. அதற்குப பதிலாக ஏழை எளியவர்களுக்கெல்லாம் உண்மையான மாம்பழங்களே தானமாகத் தரப்பட்டன!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அண்ணா சொல்லும்

இலங்கையின் வரைபடத்தில் தலையாகத் திகழ்வது யாழ்ப்பாணம் ஆகும். அது வரைபடத்தில் மட்டுமின்றி, கல்வி, செல்வம், இரண்டிலும் தலையாகத் திகழ்ந்து வந்துள்ளது. இலங்கையின் அதி சிறந்த கல்வி நிறுவனங்களே யாழ்ப்பாணத்திற்குப் பெருமையையும், செல்வத்தையும் வழங்கின.

இந்த யாழ்ப்பாணத்தில் அறிவுடை நம்பி, என்பவர் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் நண்பர் ஒருவருடன் "சரஸ்வதி சபதம்" எனும் திரைப்படம் பார்க்க இவரும் சென்றார். படம் முடிந்து வரும் போது நண்பருக்கும் அறிவுடை நம்பிக்கும் இடையில்.. கல்வியா செல்வமா? உலகில் சிறந்தது. எது அவசியமானது? என்ற விடயத்தில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறு சிறு கருத்துப் பரிமாறலாகத் தொடங்கி, வாக்குவாதப் படுகின்ற நிலைக்கு வந்து விட்டனர். இருவரும் நீண்ட நாள் நண்பர்கள். அதனால் பல தடவை இப்படி விவாதித்துப்பல விடயங்களை புதிது புதிதாக அறிந்து கொண்டுள்ளனர். இன்றைய விவாதம் அவர்களுக்குப் புதுப் புதுவிடயங்களைச் சொன்னாலும், எந்த ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை.

என்றாலும் அறிவுடைநம்பி தனது வீட்டிற்கு அருகே இருக்கும் பெரியண்ணை என்பவரிடம் போய் இது பற்றி முடிவு அறிந்து கொள்ளச் சென்றார். பெரியண்ணையோ நிறையப் படித்தவர். எல்லோராலும் "பெரியண்ணை என மதிக்கப்படுபவர். ஆனாலும் ஏழை. எளிமையான வாழ்க்கை. கிடைக்கிற காசிற்கு ஏதாவது இலக்கியப் புத்தகங்-

www.tamilarangam.net

கள் வாங்கிவந்துவிடுவார். வீட்டைப் பார்த்தால் நூலகம் போலவே இருக்கும்

"என்ன அறிவுடைநம்பி, வாரும் வாரும்" என்று பெரியண்ணை அறிவுடை நம்பியை வரவேற்றார். என்ன இந்தப் பக்கம் தலையைக் காணக் கிடைக்கல்ல

"இல்லைப் பெரியண்ணை ஒரே வேலை." இப்ப நானும் சிவலிங்கமும் 'சரஸ்வதி சபதம்' படம் பார்த்திட்டு வந்தோம். அதில் கல்வியா? செல்வமா? என்ற விடயத்தில் எது என்று சொல்ல முடியாமல் இருக்கின்றது. எனக்கென்றால் செல்வம் தான் பெரியது அது தான் தேவையான தாகப் படுகின்றது. இந்தக் காலத்தில் காசில்லாவிட்டால் எதுவும் நடக்காது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் பெரி-யண்ணை என்றான் அறிவுடை நம்பி.

செல்வமும் தேவை என்று சொல்லலாம். ஆனால் செல்வந்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவை என்றோ அதுதான் பெரியது என்றோ
நான் சொல்ல மாட்டேன். கல்விதான்
ஒருவனுக்கு முதலில் தேவையானது.
காசு பணம் இன்றைக்கு வரும் நாளைக்கு
ப் போய்விடும். செல்வம் சேரச் சேர
பயமும், அதைப் பாதுகாக்கிற கஷ்டங்களு
ம் வரும் கல்வி அப்படியில்லை. படிக்கப்
படிக்க மனதிற்கு மகிழ்ச்சியும், மற்றவர்
மத்தியில் மதிப்பும் வரும். என்று
பெரியண்ணை சொன்னார்.

ஆனால் அறிவுடைநம்பிக்கு
செல்வந்தான் பெரியது அதுதான் தேவை
என்பது தான் தெரிந்தது. பெரியண்ணையை
எதிர்த்து வாதாட முடியாது நின்றான்.

தம்பி. காசு பணம் சேர்க்கச்
சேர்க்க மனுசன் எப்படிப் போவான்
என்பதற்கு ஜேர்மனி போன சப்பண்ர
விசயம் தெரியுந்தானே?. ஏதோ மாக்கு
மாக்கு என்று ஓடித்திரிந்தான். இப்ப

www.tamilarangam.net

அவன்ர மக்கள் மக்குகளாத் திரியுதுகள். அவன்ர குடும்பமும், பட்ட பாடுகள் தெரியும் தானே? என்றார் பெரியண்ணை. ஜேர்மனி உதாரணத்துடன் அறிவுடை நம்பி வீடு திரும்பினான். வீடு சென்றும் குழப்பம் தீராதது போலவே இருந்தது. நித்திரைக்குச் சென்றான்.

வெள்ளைத்தாமரையிலிருக்கையில் வீணை யுடன் கல்விக் கடவுளான சரஸ்வதியும், சிவப்புத் தாமரையில் பொற்காசுகளுடன் செல்வக் கடவுளான லட்சுமியும், அறிவு டை நம்பி முன் தோன்றி வேண்டிய வரங்கள் தரலாம் என்றனர். அறிவுடை நம்பிக்கு என்ன எது என்று தெரியாமல் இருந்தது "அறிவுடை நம்பிக்குச் செல்வம் வழங்கி அ இவனை உலகிலே பெரிய செல்வந் தன் ஆக்குகின்றேன் பார் என்று லட்சுமி சொன்னார் 'இவன் கல்விக்கு உரியவன் இவன் பெயரே கல்வியின் பெருமையைச்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்கிறது. எனவே அறிவுடை நம்பி
எனக்குரியவன் என்று சரஸ்வதியும்,
சண்டை யிடத் தொடங்கினார்கள். சத்தம்
கூடி விடவே அறிவுடை நம்பி "நிறுத்துங்
கள் நிறுத்துங்கள்" என்று கத்தினார்.

எண்ணத்தை நிறுத்துவது?

என்று கேட்டபடி அறிவுடை நம்பியின்
மனைவி வந்தாள். அறிவுடை நம்பிக்கு
அப்பதான் தெரிந்தது தான் கண்டது கனவு
என்றும் சரஸ்வதி சபதம் இரண்டாம் பாகம்
ஓடியிருக்கிறது என்றும் சரி சரி எழும்பு-
-ங்கோ சிவத்திடம் போய்க் காசை
வாங்கி வாருங்கோ பிள்ளையைப் பள்ளிக்
கூடத்தில் சேர்க்க வேணும். இன்றைக்குத்
தான் கடைசி நாளாம், என்ற வாசங்கள்
காதில் விழுந்து கொண்டிருக்க அறிவுடை
நம்பி அவசரம் அவசரமாக வெளிக் கிடத்
தொடங்கினார். அவரது வாய் கல்வியா?
செல்வமா?, வீரமா? அன்னையா? தந்தையா
என முணுமுணுத்தது *

நன்றியுடன் "ஆன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுக்குத் தெரியுமா?

தமிழர்கள் இன்று தம் தாய்மொழியாகிய தமிழை மறந்து, அதைக் கற்பது கூட இழிவென்று எண்ணும், இன்றைய நாளில்......

பிறதேசத்து அறிஞர்கள் தமிழ்கற்று, அதன் பெருமையை உலகிற்கு உணர்த்தியிருக்கின்றார்கள். கிறீஸ்த்துவத் தந்தைமார், சமயம் பரப்ப வந்து, தமிழைக் கற்று, மேன்மேலும் வளம்படுத்தி உள்ளார்கள்.

அந்த வரிசையில் இத்தாலி தேசத்திலிருந்து வந்து வீரமாமுனிவர் என்று பெயரை மாற்றிக் கொண்ட கொன்ஸ்டைன்ரைன் பெஸ்க்கி முதல் இன்று தமிழ் கற்கும் பிறதேச அறிஞர்கள் வரை நாம், தமிழுக்காகத் தம்மைமுழுதாக, அர்ப்பணித்த பலரைக் குறிப்பிடலாம்.

www.tamilarangam.net

அவர்களில், ஜேர்மன் நாட்டி ல் வாழும் நாங்கள், தமிழுக்குத் தொண்டு புரிந்து, தமிழை வளம் படுத்திய ஜேர்மன் அறிஞர் சீகன் பால்கு (SIEGAN BALKU) என்பவரை நினைவு கூர்வது பொருத்தமாகின்றது.

சீகன்பால்கு என்ற கிறீஸ்தவத் தந்தை 1707ம் ஆண்டு தென் இந்தியாவில் உள்ள தஞ்சை மாவட்டத்தில் 'நரங்கம்பாடி' எனும் கிராமத்திற்கு வந்தார். கிறீஸ்தவ சமய நூல்கள் பலவற்றை அச்சிடுவதற்காக அச்சுக் கூடம் ஒன்றை நிறுவினர். இந்தியாவின் முதல் அச்சுக்கூடம், முதல் காகித ஆலை, முதல் பெண்கள் பாடசாலை என்பனவற்றை நிறுவிய, பலவிதமா ன பெருமைகளுக்கு உரியவர் ஆகின்றார்.

தமிழில் முதல் நாட்காட்டியை (கலண்டர்) 1715ம் ஆண்டு வெளியிட்டார். ஆற்று மணலில் கைவிரல்களால் எழுதித்தமிழ் படித்த இவ்வறிஞர். தமிழ் நூல்கள் பல அச்சுருப் பெற அயராது பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது *

நன்றியுடன்: கிராணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குட்டிக்கதை

# பேச்சுத்திறன்

கூட்ட மேடையில் ஒருவர் பேசத் தொடங்கினார். மேடைப் பேச்சில், தான் தான் பெரிய கெட்டிக்காரர் என்ற நினைப்புக் கொண்டவர் இந்தப் பேச்சாளர். இவர் பேசத் தொடங்கியதும் கூட்டத்திலிருந்த சனங்கள் ஒவ்வொருந்தராகக் கலைந்து போகத்- தொடங்கினார்கள். இறுதியில் ஒரு வயது முதிர்ந்த பாட்டி ஒருவர் தான் கூட்டத்தில் மிஞ்சி இருந்தார்.

இது பேச்சாளருக்குச் சந்தோசமாக இருந்தது. ஒரு பாட்டியாவது என்னுடைய பேச்சைச் செவிமடுத்துக் கொண்டிருக்கின்றாரே, இவரை இனிமேல் என்னுடைய பேச்சு இடம் பெறுகிற எல்லாக் கூட்டங்களுக்கும் கூட்டிப் போய், இந்தச் சனங்களுக்கு என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சின் பெருமையை விளங்கப் படுத்த வேண்டும். எதற்கும் பாட்டியுடன் பேச்சுக் கொடுத்து, சிநேகிதம் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டு..

"பாட்டி உங்களுடைய தமிழ் ஆர்வத்தை பாராட்டுகின்றேன். மெச்சுகின்றேன். நீங்கள் ஒருவராவது தமிழ் ஆர்வத்துடன் இருப்பது என்னுடைய பேச்சிற்குக் கிடைத்த பரிசாக ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்றார்.

பாட்டிக்குப் பேச்சாளரின் பேச்சு என்னவென்று விளங்கவேயில்லை. "என்னடா தம்பி, தமிழ் ஆர்வம், கீர்வம் என்டு ஏதேதோ புலம்புகிறாய். எனக்கு அது ஒண்டும் இல்லை. உந்த மேடையில வைச்சிருக்கிற பெற்றோல் மாச்சு விளக்கு என்னுடையது. அதை நான் எடுத்துக் கொண்டு, போகவேண்டும் எண்டுதான் இருக்கிறேன். என்றார் பாட்டி

www.tamilarangam.net

# குள்ளனும் இராட்சதனும்



வவுனியாவை அடுத்துள்ள ஈரப்பெரியகுளம் என்னும் கிராமம், மூலிகை வைத்தியத்திற்கு இன்றும் புகழ் வாய்ந்த தொன்றாக உள்ளது. இதற்கு அங்கே உள்ள மூலிகை நிறைந்த மலையே காரணமாய் விளங்கின்றது. இம்மூலிகை மலையில் இராட்சதன் போன்ற தோற்றமும், பலமும் வாய்ந்த ஒருவன் வசித்து வந்தான். ஏறக்குறைய அறுநூறு வருடங்களுக்கு முன்னர் இத்தகைய இராட்சதன் ஒருவன் அப்பகுதியில் வாழ்ந்து பல விதமான கொடூரங்கள் புரிந்து வந்தான் என்பதை வவுனியா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதேசத்தில் சொல்லப்படுகின்ற சில கிராமத்துக் கதைகள் வாயிலாக அறியக் கூடியதாய் இருக்கின்றது.

அன்று, அது ஒரு வழமையை விட மோசமான நாள் போல், மழை அடித்து ஓய்ந்திருந்தது. மூலிகைமலையைச் சூழ உள்ள கிராமத்துப் பயிர்கள் மழையின் வரவால் மகிழ்ந்து ஆடின. கிராமத்து மக்களுக்கு, மழை குதூகலத்தைக் கொடுத்தது. இம்முறை நல்ல மழை பெய்திருக்கின்றது. விளைச்சல் நல்லாயிருக்கும். பொங்கல் விழா இம்முறை நல்லாத்தான் கொண்டாட வேண்டும். போன்ற பேச்சுக் குரல்கள் எங்கும் ஒலித்துக் கொண்டிருந்தன.

என்னதான் மகிழ்வில் கிராமத்து மக்கள் இருந்தாலும், திடீர், திடீர் என்று கிராமத்தில் காணாமல் போகும் ஆடுகள் மாடுகள், பற்றிய பீதி அவர்களிடையே இல்லாமல் இல்லை. அந்தப் பீதியிலிருந்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுபட அவர்களால் முடியாமல் இருந்தது. காரணம் அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் அவ்வூரில் இருந்த சிலர் இது பேய்ச் சேட்டை என்று சொன்னார்கள். இதற்கு அவர்கள் மூலிகை மலையில் மரங்கள் முறிவதையும், ஏற்படும் பேரிரைச் சல்களையும் தமக்குச் சான்றுகக் காட்டினார்கள்.

இதனால் மூலிகை மலைப்பக்கம் யாரும் போவதற்கு விரும்பவில்லை. சில தினங்களுக்கு முன்னரும் அக்கிராமத்தில் ஆடுகள் சில காணமல் போயிருந்தது. பேய் தான் கொண்டு போனதாக நம்பியிருந்த மக்கள் முன் .... ஒரு சிறு விறகுவெட்டி ஒருவன் வந்து ... உங்கள் கிராமத்தில் காணமல் போகின்ற ஆடு மாடுகளுக்கு மூலிகை மலையில் இருக்கும் கிராட்சதன் போன்ற தோற்ற முடையவன் தான் காரணம் என்று சொன்னான்.

இது வேடிக்கையாக இருந்தது கேட்பதற்கு ஆனல் நேரில் காணும் வாய்ப்பினை அக்கிராம மக்கள் காணத் தயார் ஆனார்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டைப்படம்

அருமைச் சிறுவர்களே,

அட்டைப் படத்தில் இருக்கும் பாட்டியை ஒரு முறை திருப்பிப் பாருங்கள். யார் என்று சொல்லாமலே உங்களுக்குத் தெரிந்திருக்கும்; ஔவைப் பாட்டி என்று.

ஔவைப் பாட்டி என்றதும் அரிச் சுவடியில் "ஔ" என்ற எழுத்திற்கு ஔவையார் எனப் போடப்பட்டிருப்பதும், "அறம் செய விரும்பு" எனத் தொடங்கும், ஆத்திசூடியும் உங்கள் மனதில் தோன்றியிருக்கும். அமிழ்தினிலும், இனிதான பாட்டுக்களால், தமிழை வளர்த்தவர். சிறுவர்கள் நல்லவர்களாக வளர்ந்து வர வேண்டும் என எண்ணி நல்ல புத்திமதிகள் இலகுவாகப் புரிந்து கொள்ளப் பாடி, எமக்குத் தந்திருக்கின்றார்.

ஔவைப் பாட்டியின் புலமையுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட விரும்பிய சைவ சமயக் கடவுளாகிய முருகன், ஒரு நாள், ஒளவையார் வரும் வழியில் நாவல் மரம் மீது தோன்றினர்.

மாடு, ஆடு மேய்க்கும் சிறுவனைப் போல் தோன்றி நாவல் மரத்தின் மீது ஏறி நாவற் பழங்களைத் தின்று கொண்டிருந்தார். அவ்வழியே வந்த ஒளவைப் பாட்டிக்கு நாவற் பழம் தின்ன வேண்டும் போலிருந்தது. மரத்தின் மீது நின்ற சிறுவனைப் பார்த்து "தம்பி கொஞ்சம் நாவற்பழம் பறித்துத் தருகின்றாயா? தாகமாய் இருக்கின்றது என்றார். 'பாட்டி! "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று சிறுவன் கேட்டான். "பழத்திலும் சுட்ட பழம் என்றிருக்கின்றதா?, பாட்டிக்கு யோசிக்கச் சிரிப்பாக இருந்தது. சுட்ட பழம் வேண்டும் என்றார் பாட்டி. சிறுவன் மரக்கொப்புக்களை ஆட்டினான். பழங்கள் கீழே மணலில் விழுந் தன. பாட்டி அவற்றைப் பொறுக்கி எடுத்து அவற்றிலிருந்த மண், தூசிகளைப் போக்கிக்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊ... ஊ.... என்று ஊதினார்.

"என்ன பாட்டி பழம் சுடுகிறதா? எனச் சிறுவன் கேட்டான்.

பாட்டிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

எத்தனையோ புலவர்கள் வென்ற என் புலமை இச் சிறுவனின் புலமைக்கு முன் தோற்று விட்டதே என நாணினார்.

"ஔவைப் பாட்டியே நான்தான் உங்கள் முன் இச் சிறுவிளையாட்டை நடாத்தினேன்" என்ற குரல் ஒலித்தது.

சிறுவன் மறைந்தான். முருகனின் தோற்றம் ஔவைப் பாட்டிக்குத் தெரிந்து மறைந்தது.


நன்றியுடன் "ஆன்"

பொட்டுப் போல் இலை இருக்கும்;
பொரி போல பூப் பூக்கும்;
தின்னக் காய் காய்க்கும்;
தின்றாத பழம் பழுக்கும். என்ன அது?

இதன் விடை (முருங்கை)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை, தென்னை, பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு

கோடுகள் காட்டும் மையப்புள்ளியே சரியான இடத்தைக் குறிக்கின்றன. எழுதப்பட்ட இடங்கள் அல்ல!

www.tamilarangam.net

உங்களிடமிருந்து,...

சிறுவர் அமுதம் தொடர்பான
ஆலோசனைகள், அறிவுரைகள்,
விமர்சனங்கள், அபிப்பிராயங்கள்,
என்பனவற்றுடன்..
சிறுவர்களுக்குப் பொருந்தும் என்று
கருதுகின்ற இலக்கியங்கள்,
குட்டிக்கதைகள் நீதிக்கதைகள்,
சிரிப்புக்கதைகள், விடுகதைகள்,
யாவையும் அனுப்பி உதவுங்கள்.

நீங்கள் தாமதியாமல் எமக்கு
அனுப்பி உதவினால்!
நாங்களும் சிறுவர் அமுதத்தை
ஒவ்வொரு தமிழ் முதலாந்திகதியும்
தாமதியாமல் வழங்குவோம்.

தொடர்புகளுக்கு

SINNA-RAJESWARAN
"AMUTHAM"
GLADBACHER STR-16
5013 ELSDORF (RHLD

**KINDERFREUNDLICH MAGAZINE**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்